தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 7, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஜனவரி 20, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

விடாமுயற்சியும், நிறைந்த அறிவும் என்ற இரண்டினையும் கொண்டு, ஓய்வில்லாமல் ஒருவர் செய்கின்ற செயலால், அவரது குடியானது உயர்வடையும்.

1. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 186 முதல் 190 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

[2006 ஜனவரி 20

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 130–வது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 62–வது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும். திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூற விழைகிறேன். இப்பொழுது 12–வது சட்டமன்றப் பேரவையினுடைய நிறைவுக் கூட்டம். இது நிறைவுக் கூட்டம் என்ற காரணத்தினாலே இந்த 12–வது சட்டமன்றப் பேரவையில் எனக்கு வாய்ப்பளித்த, எந்தப் பதவிக்கும் செல்லாமல், அரசியலிலோ அல்லது கட்சியிலேகூட எந்தப் பதவிக்கும் செல்லமாட்டேன் என்று என் வாழ்வும், வளமும் இந்த மக்களின் உரிமைப் பிரச்சினை என்று போராடிக்கொண்டிருக்கிற சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: இல்லை. பேசும்பொழுதே ஆரம்பமே சரியாக இருக்காது (குறுக்கீடுகள்).